# மணப்பாறை நகராட்சி

**2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 20-ம் தேதி திங்கட் கிழமை காலை 10.20 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில்**

**நடைபெற்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>20.07.2026</td><td>

**பொருள் – 1**

மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 58-கடைகளில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிய கடைகளை தவிர மீதம் உள்ள 16 கடைகளுக்கு 32-வது அழைப்பாக 24.06.2026-ம் தேதி மாதவாடகை அடிப்படையில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்றது. அதில் கடை எண்: 14-க்கு மட்டும் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ, எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை. (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>விமலா, க/பெ, ராதகிருஷ்ணன், 13/போஜநாயக்கன்பட்டி, நாகனூர், கரூர்.</td><td>ரூ,3150/-</td></tr>
<tr><td>2</td><td>சண்முகப்பிரியா சந்தானம், க/பெ, ரஞ்சித்குமார், 129/ சேதுரெத்தினபுரம், மணப்பாறை.</td><td>ரூ,3000/-</td></tr>
</table>

மேற்படி கடைஎண்: 14-க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ,3150/-க்கு மாதவாடகைக்கு கோரியுள்ள திருமதி,விமலா, க/பெ, ராதாகிருஷ்ணன், 13/போஜநாயக்கன்பட்டி, நாகனூர், கரூர். என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,

**<u>அலுவலக குறிப்பு:</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் புதிதாக 58- கடைகள் கட்டப்பட்டு மீதம் உள்ள

</td><td>

**தீர்மான எண்.1076**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>16-கடைகளுக்கு முப்பத்திஒன்று முறை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் கோரவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை இதனால் கடையினை வாடகைக்கு விடமுடியாமல் நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தற்போது முப்பத்திஇரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது, மேற்படி ஒப்பந்தப் புள்ளியில் கோரியுள்ள உயர்ந்தபட்ச மாத வாடகை பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகை மதிப்பை விட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம்.<br>(ந.க.எண்: 0992/2023/அ2,)</td><td></td></tr>
<tr><td>20.07.2026</td><td>பொருள் – 2<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 58-கடைகளில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிய கடைகளை தவிர மீதம் உள்ள16 கடைகளுக்கு 32-வது அழைப்பாக 24.06.2026-ம் தேதி மாதவாடகை அடிப்படையில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்றது. அதில் கடை எண்: 41-க்கு மட்டும் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ, எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை. (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>விமலா, க/பெ, ராதகிருஷ்ணன், 13/போஜநாயக்கன்பட்டி, நாகனூர், கரூர்.</td><td>ரூ,3120/-</td></tr>
<tr><td>2</td><td>சண்முகப்பிரியா சந்தானம், க/பெ, ரஞ்சித்குமார், 129/ சேதுரெத்தினபுரம், மணப்பாறை.</td><td>ரூ,2950/-</td></tr>
</table>
மேற்படி கடைஎண்: 41-க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ,3120/-க்கு மாதவாடகைக்கு கோரியுள்ள திருமதி,விமலா, க/பெ, ராதகிருஷ்ணன், 13/போஜநாயக்கன்பட்டி, நாகனூர், கரூர். என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,<br><u>அலுவலக குறிப்பு:</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் புதிதாக 58- கடைகள் கட்டப்பட்டு மீதம் உள்ள 16-கடைகளுக்கு முப்பத்திஒன்று முறை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் கோரவோ அல்லது</td><td>தீர்மான எண்.1077<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை இதனால் கடையினை வாடகைக்கு விடமுடியாமல் நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தற்போது முப்பத்திஇரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது, மேற்படி ஒப்பந்தப் புள்ளியில் கோரியுள்ள உயர்ந்தபட்ச மாத வாடகை பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை தொகை மதிப்பை விட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம்.<br>(ந.க.எண்: 0992/2023/அ2,)</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.07.2026</td>
<td>பொருள் – 3<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வணிகவளாக கடை எண்: 18-க்கு 37-வது முறையாக 24.06.2026-ம் தேதி மாதவாடகை அடிப்படையில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்றது. அதில் கடைஎண்: 18-க்கு பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ, எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை. (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>S.J பிரெட்ரிக்ஸ், த/பெ, FSA.தம்புராஜ், 27/வீராட்சி தெற்குதெரு, வெள்ளக்கல். மணப்பாறை,</td><td>ரூ, 7000/-</td></tr>
<tr><td>2</td><td>F.ஸ்டீபன் ஆபிரகாம் தம்புராஜ், த/பெ, பெட்ரிக்ஸ், 27/ வெள்ளக்கல், மணப்பாறை.</td><td>ரூ, 6400/-</td></tr>
</table>
மேற்படி கடைஎண்: 18-க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ,7000/-க்கு மாத வாடகைக்கு கோரியுள்ள திரு. S.J.பிரெட்ரிக்ஸ், த/பெ, FSA. தம்புராஜ், 27/வீராட்சி தெற்குதெரு, வெள்ளக்கல். மணப்பாறை, என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,<br><u>அலுவலக குறிப்பு:</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வணிக வளாக கடைஎண்:18-க்கு முப்பத்திஆறு முறை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுவந்த நிலையில் கடந்து மூன்று வருடமாக பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை மேலும் மின்னனு ஒப்பந்தப்புள்ளி (E-Tenter) மூலமும் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை எனவே நகராட்சிக்கு</td>
<td>தீர்மான எண்.1078<br>மறு ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | வருவாய் இழப்பு ஏற்படாவண்ணம் தற்போது முப்பத்தி ஏழாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டதில் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ,7000/-க்கு அளித்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.<br>**(ந.க.எண்: 1393/2022/அ2,)** | |
| 20.07.2026 | **பொருள் – 4**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான வாரகாய்கனி சந்தையினை குத்தகைதாரர் திரு,கா.அப்துல்முனாப். த/பெ.காதர்மைதீன், 24A. மோர்குளம் மணப்பாறை என்பவருக்கு வாரகாய்கனி சந்தையில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் ரூ,16,00,000/- இலட்சத்திற்கு பொதுஏலம் கோரப்பட்டு வருடத்திற்கு 5% சதவீதம் கேட்புத்தெகையில் உயர்வு செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மூன்று வருட காலத்திற்கு மேற்கண்ட உரிமம் அரசாணை எண்:181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 09.07.2007-ன்படி மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் ஒப்படைப்பு செய்யப்பட்டது தற்போது குத்தகைதாரருக்கு உடல் நிலை சரியில்லாதா காரணத்தால் மேற்கண்ட குத்தகை உரிமம் இனத்தினை நகராட்சி வசம் கடந்த 23.02.2026 அன்று ஒப்படைப்பு செய்வதாக கடிதம் அளித்துள்ளார் மணப்பாறை நகராட்சியின் குத்தகை இனங்களின் பொது மற்றும் தனிக்கட்டுபாடுகள் விதி 41 -ன் படி உரிம ஆண்டில் ஏலதாரர் தான் எடுத்துள்ள ஏல இனத்தை நிர்வகிக்க இயலாத பட்சத்தில் நகராட்சிக்கு மூன்று மாத அவகாசம் கொடுத்த பின்னரே குத்தகை உரிமை இனத்தை நகராட்சி வசம் ஒப்படைக்கபட வேண்டும் என வதியுள்ளது இந்நிலையில் 2026-2027-ம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டு குத்தகை உரிமை தொகை செலுத்தி உரிமம் புதுப்பித்துக்கொள்ள குத்தகைதாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் குத்தகைதாரர் இரண்டாம் ஆண்டு குத்தகை தொகை உரிய காலத்திற்குள் செலுத்தவில்லை எனவே 31.03.2026- வுடன் முதலாம் ஆண்டு குத்தகை உரிமை காலம் முடிவடைந்து புதுப்பிக்காமல் இருந்ததால் மேற்கண்ட குத்தகை உரிமத்தை நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டும் மேலும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு துறைமூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது தற்போது தேர்தல் நன்னடத்தை விதிகள் திரும்ப | **தீர்மான எண்.1079**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

<table>
<tr>
<td></td>
<td>பெறப்பட்டதால் வாரகாய்கனி சந்தையில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் உரிமத்திற்கு புதிதாக பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் ஏல விதிகளின்படி குத்தகைதாரர் செயல்படாததால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு :-<br><br>மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.07.2026</td>
<td>பொருள் – 5<br><br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை இனங்கள் மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களின் குத்தகைதாரர் வாடகை நிலுவைத் தொகையினை செலுத்தக்கோரிய அறிவிப்பு கீழ்க்கண்ட தினசரி நாளிதழில் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாள்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>தினத்தந்தி</td><td>25.05.2026</td><td>Adwave Advertising Private Limited - Chennai</td><td>26880/-</td></tr>
<tr><td colspan="4">மொத்தம்</td><td>26880/-</td></tr>
</table>
<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்கண்ட விளம்பரைக் கட்டணத் தொகை ரூ.26880/-ஐ வழங்கவும், செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.2734/2024/அ2)</td>
<td>தீர்மான எண்.1080<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது</td>
</tr>
<tr>
<td>20.07.2026</td>
<td>பொருள் – 6<br><br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 கரிக்கான் குளம் பகுதியில் சலவை பணி (டோபிகானா) மேற்கொள்ளும் இடத்தில் Single Phase-ஆக உள்ள மின் இணைப்பினை 3 Phase-ஆக</td>
<td>தீர்மான எண்.1081<br>பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மாற்றி அமைக்கும் பணி மற்றும் மின்சார வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1.10 இலட்சத்தில் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.984 நாள்.03.02.2026-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி பணி மேற்கொள்ள சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் வந்ததால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 57(7)-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.88,412/-ஐ மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>பதிவு செய்யலாம் | |
| 20.07.2026 | **பொருள்** – 7<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு தர்மலிங்கம் தெரு RSR காம்ப்ளக்ஸ் அருகில் மற்றும் ஆர்மேன்ஸ் மஹால் அருகில் காவிரி குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.0.80 இலட்சத்தில் பணி மேற்கொள்ள சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் வந்ததால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 57(7)-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.பி.கோபால் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.75,967/- மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.1082**<br>பதிவு செய்யப்பட்டது |
| 20.07.2026 | **பொருள்** – 8<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1.97 இலட்சத்தில் பணி மேற்கொள்ள சட்டமன்ற | **தீர்மான எண்.1083**<br>பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் வந்ததால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 57(7)-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.பி.கோபால் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.1,94,605/- மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>பதிவு செய்யலாம் | |
| 20.07.2026 | **பொருள் – 9**<br>அரசாணை நிலை (MS)எண்.390-ன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 10 இடங்களில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்களுக்கு தேவையான சாமியானா பந்தல் விளம்பர பதாகைகள் ஒலி ஒளி சர்வீஸ் உணவு வழங்குதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.22.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 57(7)-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.21,71,825.40/- மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.1084**<br>பதிவு செய்யப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 10**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 சிதம்பரத்தான்பட்டி மற்றும் திருச்சி ரோடு பகுதியில் பழுதடைந்துள்ள பகிர்மான குழாயினை சீரமைக்கும் பணி மற்றும் புதிதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 11.06.2026-ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மான எண்.1085**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED, 73 கோவில்பட்டி ரோடு, ராம்சிங் நகர், மணப்பாறை. | மதிப்பீட்டை விட –11.25% குறைவு |
| 2. | திரு.A.ரஜினி, ஒப்பந்ததாரர், 3979, வலையப்பட்டி, பன்னாங்கொம்பு, மணப்பாறை. | மதிப்பீட்டை விட -0.04% கூடுதல் |
| 3. | திரு.D.ஜேம்ஸ், ஒப்பந்ததாரர், 14/10A, சர்ச் தெரு,பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை. | மதிப்பீட்டை விட 0.94% கூடுதல் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்கள் மதிப்பீட்டை விட -11.25% குறைவாக வழங்கியுள்ளார். எனவே, YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்

---

20.07.2026

**பொருள் – 11**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 11.06.2026-ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED, 73 கோவில்பட்டி ரோடு, ராம்சிங் நகர், மணப்பாறை. | மதிப்பீட்டை விட –9.80% குறைவு |
| 2. | திரு.A.ரஜினி, ஒப்பந்ததாரர், 3979, வலையப்பட்டி, பன்னாங்கொம்பு, மணப்பாறை. | மதிப்பீட்டை விட -0.046% கூடுதல் |

**தீர்மான எண்.1086**

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 3. | திரு.D.ஜேம்ஸ், ஒப்பந்ததாரர்,<br>14/10A, சர்ச் தெரு, பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை. | மதிப்பீட்டை விட 0.59%<br>கூடுதல் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்கள் மதிப்பீட்டை விட -9.80% குறைவாக வழங்கியுள்ளார். எனவே, YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்

20.07.2026

**பொருள் – 12**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 12.06.2026-ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.S.சண்முகம், ஒப்பந்ததாரர்,<br>171, திருச்சி ரோடு, மணப்பாறை. | மதிப்பீட்டை விட<br>-12.11% குறைவு |
| 2. | திரு.S.பாஸ்கர்,<br>2/197, காரைப்பட்டி, மணப்பாறை. | மதிப்பீட்டை விட<br>-5.04% கூடுதல் |
| 3. | YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED,<br>73 கோவில்பட்டி ரோடு, ராம்சிங் நகர், மணப்பாறை. | மதிப்பீட்டை விட<br>-12.03% கூடுதல் |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.சண்முகம் ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்கள் மதிப்பீட்டை விட -12.11% குறைவாக வழங்கியுள்ளார். எனவே, திரு.S.சண்முகம் ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1087**

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 20.07.2026 | **பொருள் – 13**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.821 நாள்.31.07.2025-ஆம் தேதிய கூட்ட தீர்மானத்தின்படி, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் ரூ.150.00 இலட்சத்தில் மேற்கண்ட குப்பை கிடங்கில் FSTP பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட திட்டப்பணிக்கு அரசு கூடுதல் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் ஆகியோர்களால் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் திட்டப்பணியினை காலதாமதமின்றி விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, FSTP பணியினை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட குப்பை கிடங்கில் நடைபெற்று வரும் இத்திட்டப்பணியினை முழுமையாக முடிப்பதற்கு தேவைப்படும் இடத்தில் மட்டும் குப்பை கழிவுகளை அகற்றினால் மட்டுமே கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள இயலும் என்பதால் மேற்கண்ட குப்பை கிடங்கில் குவிக்கப்பட்டுள்ள குப்பை கழிவுகளை அகற்றும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.19.90 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>வருவாய் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1088**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |
| 20.07.2026 | **பொருள் – 14**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 பாத்திமாமலை பகுதியில் உள்ள ஆழ்துளைகிணறு பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியிலுள்ள பொதுமக்களின் தண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வார்டு எண்.25 பாத்திமாமலை பகுதியிலுள்ள ஆழ்துளைகிணற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.2.30 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** குடிநீர் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1089**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 20.07.2026 | **பொருள் – 15**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 சந்தியாகுபுரம் பகுதியில் உள்ள ஆழ்துளைகிணறு பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியிலுள்ள பொதுமக்களின் தண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வார்டு எண்.24 சந்தியாகுபுரம் பகுதியிலுள்ள ஆழ்துளைகிணற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>குடிநீர் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1090**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 16**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வார்டுகளில் 191 ஆழ்துளை கிணறுகள் உள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் பொறுத்தப்பட்டுள்ள மினிபவர் பம்பு மோட்டார்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதால் அவ்வப்பொழுது பழுது ஏற்படுகிறது. இதனால் மினிபவர் பம்பு மோட்டாரில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யக்கோரி அப்பகுதி மக்களும் நகர்மன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து வழியுறுத்தி வருகின்றனர். எனவே பொதுமக்களின் அடிப்படை தேவையான தண்ணீர் வசதியினை சீராக வழங்கும் பொருட்டு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வார்டுகளில் ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>குடிநீர் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1091**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 17**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 16 முதல் 27 வார்டுகளில் 130 ஆழ்துளை கிணறுகள் உள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பொதுமக்களுக்கு தண்ணீர் | **தீர்மான எண்.1092**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் பொறுத்தப்பட்டுள்ள மினிபவர் பம்பு மோட்டார்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதால் அவ்வப்பொழுது பழுது ஏற்படுகிறது. இதனால் மினிபவர் பம்பு மோட்டாரில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யக்கோரி அப்பகுதி மக்களும் நகர்மன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து வழியுறுத்தி வருகின்றனர். எனவே பொதுமக்களின் அடிப்படை தேவையான தண்ணீர் வசதியினை சீராக வழங்கும் பொருட்டு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சிக்குட்பட்ட 16 முதல் 27 வார்டுகளில் ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>குடிநீர் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | |
| 20.07.2026 | **பொருள் – 18**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் 95 மாணவ மாணவிகளின் நலன் கருதி குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் கொள்முதல் செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1.55 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>கல்வி நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1093**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 19**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 செவலூர் பாலு வாட்டர் ஒர்க்ஸ் பகுதியிலுள்ள இறுதி சடங்கு செய்யும் கொட்டகை பழுதடைந்துள்ளதால் அதனை மராமத்து செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.7.80 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>வருவாய் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1094**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 20.07.2026 | **பொருள் – 20**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 கோவில்பட்டி ரோடு பகுதியிலுள்ள இந்நகராட்சி வணிக வளாக கட்டிடம் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.7.70 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>வருவாய் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1095**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |
| 20.07.2026 | **பொருள் – 21**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.20383/2022/H2 27.02.2026-ஆம் தேதிய செயல்முறையின்படி, மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கைவிடப்பட்ட, நோய்வாய்ப்பட்ட, வயதான மற்றும் பலவீனமான விலங்குகளுக்காக காப்பகம் கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.46.00 இலட்சத்தில் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களின் 13.06.2026-ஆம் தேதிய காணொளி காட்சி ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை (Animal Birth Control) செய்து நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பணி மேற்கொள்வதற்கு நாய் பிடிக்கும் புதிய வாகனம் கொள்முதல் செய்வதற்கும் (சாலைவரி மற்றும் பதிவு கட்டணம் உட்பட) மற்றும் நாய்களை பிடித்து வருவதற்கு ஏதுவாக வாகனத்திற்கு கூண்டு அமைப்பதற்கும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1096**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. மேலும் பொருளில் பணி துவங்கப்படவுள்ளது என திருத்தம் செய்யப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |
| 20.07.2026 | **பொருள் – 22**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 சாய் அக்‌ஷயா நகர் பகுதியிலுள்ள பொதுமக்கள் இந்நகராட்சி கிணற்று தண்ணீரை பயன்படுத்தி வந்தனர். தற்பொழுது கிணற்று தண்ணீர் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே | **தீர்மான எண்.1097**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி பகுதியிலுள்ள பொதுமக்களின் தண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நகராட்சி கிணற்றின் அருகே ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>குடிநீர் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | |
| 20.07.2026 | **பொருள் – 23**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 வாரச்சந்தையில் உள்ள 50-க்கும் மேற்பட்ட LED Focus விளக்குகள் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை மாற்றி புதிதாக 100W LED Focus விளக்குகள் சீரமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.6.10 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>வருவாய் நிதி நிலைமைக்கு ஏற்ப அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1098**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 24**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டு பகுதிகளில் காவேரி குடிநீர் தினந்தோறும் வழங்கப்படவுள்ளதால் இந்நகராட்சி குடிநீர் பிரிவில் வால்வு ஆப்ரேட்டர் மற்றும் மேல்நிலைநீர்தேக்க தொட்டி பராமரிப்பு பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் விநியோக பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.R.C.J3/16318/2025 நாள்:13.05.2025 தினக்கூலி விகித அட்டவணையின்படி, ஒரு வருடத்திற்கு மதிப்பீட்டு தொகை ரூ.15.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்பொழுது மேற்கண்ட பணி 2026-செப்டம்பர் மாதத்துடன் முடிவு பெற உள்ளதால் இந்நகராட்சி குடிநீர் பிரிவில் வால்வு ஆப்ரேட்டர், மேல்நிலைநீர்தேக்க தொட்டி பராமரிப்பு பணி, டிராக்டர் வாகனம் இயக்குவதற்கு ஓட்டுநர் மற்றும் குளோரினேசன் ஆப்ரேட்டர், சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் | **தீர்மான எண்.1099**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

<table>
<tr>
<td></td>
<td>செயல்முறை ந.க.எண்.R.C.J3/7236/2026 நாள்:01.04.2026 தினக்கூலி விகித அட்டவணையின்படி, ஒரு வருடத்திற்கு மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. அனுமதிக்கலாம்<br>2. செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.07.2026</td>
<td>பொருள் – 25<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 மஞ்சம்பட்டியில் அங்கன்வாடி அமைக்கும் பணிக்கு ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 16.03.2026-ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டின்படி விலை விகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.S.சண்முகம்,<br>ஒப்பந்ததாரர், 171, திருச்சி ரோடு, மணப்பாறை.</td><td>மதிப்பீட்டை விட –9.89% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.S.பாஸ்கர்,<br>2/197, காரைப்பட்டி, மணப்பாறை.</td><td>மதிப்பீட்டை விட 0.001% கூடுதல்</td></tr>
<tr><td>3.</td><td>YESVEE ANANTH BUILD-CON PRIVATE LIMITED,<br>73 கோவில்பட்டி ரோடு, ராம்சிங் நகர், மணப்பாறை.</td><td>மதிப்பீட்டை விட -4.12% கூடுதல்</td></tr>
</table>
வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.சண்முகம் ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்கள் மதிப்பீட்டை விட –9.89% குறைவாக வழங்கியுள்ளார். எனவே, திரு.S.சண்முகம் ஒப்பந்ததாரர், மணப்பாறை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. அனுமதிக்கலாம்<br>2. அரசாணை (நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.03.2024-ன்படி, பணி மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.1100<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>20.07.2026</td>
<td>
பொருள் – 26<br>
மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 தீராம்பட்டி மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி சீரமைக்கும் பணிக்கு ரூ.6.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 16.03.2026-ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டின்படி விலை விகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.A.ரஜினி,<br>ஒப்பந்ததாரர், 3979, வலையப்பட்டி,<br>பன்னாங்கொம்பு, மணப்பாறை.</td><td>மதிப்பீட்டை விட –6.94% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.M.ஜபருல்லா,<br>ஒப்பந்ததாரர், 160/1, மஸ்தான் தெரு,<br>மணப்பாறை.</td><td>மதிப்பீட்டை விட 0.010% கூடுதல்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.A.ரஜினி ஒப்பந்ததாரர், பன்னாங்கொம்பு அவர்கள் மதிப்பீட்டை விட –6.94% குறைவாக வழங்கியுள்ளார். எனவே, திரு.A.ரஜினி ஒப்பந்ததாரர், பன்னாங்கொம்பு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மான எண்.1101<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>20.07.2026</td>
<td>
பொருள் – 27<br>
மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 ஜீவாத் தெரு பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மியா வாக்கியில் மரக்கன்றுகளை பாதுகாப்பதற்காக அதனை சுற்றி கம்பி வேலி அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4.15 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மான எண்.1102<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 20.07.2026 | **பொருள் – 28**<br>மணப்பாறை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர்களுக்கு தூய்மை பணியாளர்கள் நலத்திட்டப்படி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்ய 22.07.2026-அன்று Purpose of Entitlement Camps நடத்த மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.1103**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 29**<br>மணப்பாறை நகரமன்ற அவசரக் கூட்ட தீர்மான எண்:1073-ன் நாள்:27.05.2026-ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட மதுரை ரோட்டில் அரசுக்கு சொந்தமான இடத்தில் விலங்குகள் காப்பகம் (Animal Birth Control Shelter) அமைப்பதற்கு மாற்று இடம் தேர்வு செய்தும் பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.<br>வட்டாட்சியர் மணப்பாறை அவர்களின் கடிதம் ந.க.ஆ1/1250/2026 நாள்: 03/07/2026-ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட செவலூர் கிராமம் வார்டு : F பிளாக் : 1, நகர புல எண் : 19/1, (பழைய புல எண்:659/1) ச. பு தீர்வை ஏற்பட்ட தரிசு மொத்த பரப்பு: 0.0917 ச.மீ - ல் 0.0646.0 ச.மீ பரப்பிலும், வார்டு : F பிளாக் : 1, நகர புல எண்: 19/10, (பழைய புல எண்:659/10) ச. பு தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு மொத்த பரப்பு: 0.0109 ச.மீ-ல் 0.00950.0 ச.மீ பரப்பிலும் ஆக கூடுதல் 0.0741.0 ச.மீ பரப்பில் விலங்குகள் காப்பகம் அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்து வழங்கிட நகரமன்றத்தின் தடையின்மை சான்று பெற்று வழங்க கோரியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட அரசுக்கு சொந்தமான இடத்தில் விலங்குகள் காப்பகம் அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :-**<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.1104**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |
| 20.07.2026 | **பொருள் – 30**<br>மணப்பாறை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி தொப்பம்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட கிராம புல எண் : 444ல் அரசு தீர்வை ஏற்படாத தரிசு மொத்த பரப்பு 4.15.0 ஹெக்டர் நிலத்தில் 0.81.0 ஹெக்டர் நிலம் மணப்பாறை நகராட்சிக்கு உள் நுழைவு | **தீர்மான எண்.1105**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதி வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டது. மேற்கண்ட பணியினை துவங்கி தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் 16.04.2025 அன்று தொப்பம்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட ஊர் பொது மக்கள் பணியினை மேற்கொள்ளவிடாமல் தடுத்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படக்கூடிய நிலை உருவாகி பணி மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.<br>மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டு உத்தரவுகளின் படியும், SBM 2.0 இயக்கத்தின் படி, புதிய திடக்கழிவு மேலாண்மை விதிகளை செயல்படுத்துவதற்கு இந்நகராட்சிக்கு சொந்தமான நிலம் ஏதும் இல்லை. இதனால் SBM 2.0 இயக்கத்தின் திட்ட விதிகளில் உள்ளவாறு, தூய்மை பணிக்காக்க குப்பைகளை பிரித்தல், சேகரித்தல் மற்றும் அப்புறப்படுத்துதல், திட்ட நிலை மற்றும் செயலாக்கம், பழைய கழிவுகளை சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவதற்கும் அரசின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை விதிகளின்படி நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால் மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேரும் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைக்காகவும் மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு F, பிளாக் எண்.11 நகர புல எண்.14/8 பழைய சர்வே எண்.668/5-ல் பரப்பு 1 . 3050.0 ஹெக்டர் தரிசு நிலம் ஆவணங்களில் அரசுக்கு சொந்தமான இடத்தில் மணப்பாறை நகராட்சிக்கு 6000 சதுரமீட்டர் தரிசு நிலம் உள்நுழைவு அனுமதி (ENTER UPON PERMISSION) நில உரிமை மாற்றம் செய்ய தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>அனுமதிக்கலாம். | |
| 20.07.2026 | **பொருள் – 31**<br>கூடுதல் தலைமை செயலர், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்:3146/NA3/2026-1 நாள்:03.06.2026. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:9514/4/2022/ SBM 2.0 நாள்:04.06.2026. சென்னை அவர்களின் கடிதங்களின் படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு ABC மற்றும் ARV பணிகளை செய்து தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தெரு நாய்களை பிடிக்க அலுமினிய வலை 5 எண்ணிக்கையில் தேவைப்படுகிறது. ஆகவே மேற்படி வலை வாங்க உத்தேச செலவின தொகை ரூ.75000/- பொது சுகாதார அவசர அவசியம் கருதி கூட்டுறவு நிறுவனம் ஆன | **தீர்மான எண்.1106**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ திருச்சி என்ற கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்: 131/2025/எச்1) | |
| 20.07.2026 | **பொருள் – 32**<br>கூடுதல் தலைமை செயலர், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்:3146/NA3/2026-1 நாள்:03.06.2026. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் :9514/4/2022/ SBM 2.0 நாள்:04.06.2026. சென்னை அவர்களின் கடிதங்களின் படி இந்நகரட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு ABC மற்றும் ARV பணிகளை செய்து தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி கூண்டு வாகனம் இந்நகராட்சியில் இல்லை. ஆகவே கூண்டு வாகனம் வாடகைக்கு எடுத்து பயன்படுத்த வேண்டியுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்த புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும். அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.2,00,000/- மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | **தீர்மான எண்.1107**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |
| 20.07.2026 | **பொருள் – 33**<br>மணப்பாறை நகராட்சி பகுதிகளில் மழைகாலங்களில் மழைநீர் பாத்திமாமலையில் இருந்தும், விராலிமலை ரோடு பகுதிகளில் பெய்யும் மழைநீர் மொத்தமாக மதுரைரோடு, திண்டுக்கல் ரோடு, ரவுண்டான, பேருந்து நிலையம், மஸ்தான்தெரு ஆகிய பகுதிகள் மொத்தமாக வந்து சூழ்ந்து கொள்கிறது. மஸ்தான்தெருவில் உள்ள வீடுகளுக்குள்ளும் மழை நீர் புகுந்து விடும் நிலை உள்ளது. ஆகவே மழை நீர் செல்லும் வழிதடமாகிய மாமுண்டி ஆறிலிருந்து வெள்ளைக்கல்பகுதி சொக்கலிங்கபுரம்வரை வழித்தடத்தின்இரு பகுதிகளிலும் முட்புதர்களை அகற்றி தூர்வார வேண்டி உள்ளது. மேலும் | **தீர்மான எண்.1108**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை கடிதம் |

| | | |
|---|---|---|
| | குப்பைகிடங்கில் அவ்வப்போது குப்பைகளை மேல் ஏற்றி சரி செய்ய வேண்டி உள்ளது. இவற்றிற்கு Hitachi இயந்திரம் எடுத்து பயன்படுத்த வேண்டி உள்ளது . பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி அவற்றிற்கான உத்தேச செலவு தொகை ரூ.7,00,000/-(ஏழு லட்சம் மட்டும்)க்கும், ஒப்பந்த புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்: 1511/2026/எச்1) | ஒட்டப்பட்டுள்ளது.<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |
| 20.07.2026 | **பொருள்** – 34<br>நகராட்சி எல்லை பகுதிகளில் உள்ள சாக்கடை சுத்தம் செய்வது, சாக்கடை மண் அகற்ற, முட்புதர்கள் அகற்ற, மண்மேடுகளை சரி செய்ய , குப்பை கிடங்கை சரி செய்ய, Urban Greening படி மரக்கன்றுகள்நட JCB இயந்திரம் வாடகைக்கு எடுத்து பயன்படுத்த வேண்டி உள்ளது. தற்போது பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.7,00,000/-(ஏழு லட்சம் மட்டும்)க்கும், ஒப்பந்த புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்: 1512/2026/எச்1) | **தீர்மான எண்.1109**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |
| 20.07.2026 | **பொருள்** – 35<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ்க்கண்டவாறு டெங்கு நோய் தடுப்பு மருந்து பொருட்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆதித்யா ஏஜென்சிஸ், திருவேற்காடு, சென்னை நிறுவனத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்கான உத்தேச | **தீர்மான எண்.1110**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் |

<table>
<tr><td></td><td>செலவினத் தொகை ரூ.4,00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>அளவு</th></tr><tr><td>1</td><td>பைரத்திரம்</td><td>200 லிட்டர்</td></tr><tr><td>2</td><td>டெமிபாஸ்</td><td>200 லிட்டர்</td></tr></table><br><u>அலுவலகக்குறிப்பு</u>:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்: 1028/2026/எச்1)</td><td>ஒட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>20.07.2026</td><td>பொருள் – 36<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2026 2027 ஆம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு கீழ்க்கண்டவாறு தளவாட சாமான்கள் தேவைப்படுகிறது. அதனை வாங்கி பயன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், திருச்சி என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr><tr><td>1</td><td>கூட்டு மிளார்</td><td>70</td></tr><tr><td>2</td><td>தகர டப்பா</td><td>50</td></tr><tr><td>3</td><td>கை தகரம்</td><td>50</td></tr><tr><td>4</td><td>கை மிளார்</td><td>300</td></tr><tr><td>5</td><td>சாக்கடை கரண்டி (பிடியுடன்)</td><td>50</td></tr><tr><td>6</td><td>5 பல் கொக்கி</td><td>50</td></tr><tr><td>7</td><td>மண்வெட்டி பிடியுடன்</td><td>30</td></tr></table><br><u>அலுவலகக்குறிப்பு</u>:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்: 1029/2026/எச்1)</td><td>தீர்மான எண்.1111<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 20.07.2026 | **பொருள் – 37**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சமுதாய கழிப்பறை, பொதுக்கழிப்பறை மற்றும் நகராட்சி அலுவலக கழிப்பறைகளை சுத்தம் செய்ய தேவையான பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்புத்தூள், வாசனை பினாயில், ஆசிட், லைசால் ஆகிய கிருமி நாசினிகள் வாங்குதவற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், திருச்சி என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்: 568/2026/எச்1) | **தீர்மான எண்.1112**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |
| 20.07.2026 | **பொருள் – 38**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நோய்தடுப்பு பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி ஆண்டு முழுவதும் DBC பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி இந்நகர்மன்ற தீர்மான எண்: 841 நாள்: 31.07.2025-ன்படி 875 நாள்: 29.09.2025 மற்றும் 1006 நாள்: 03.02.2026-ன்படி பணிகள் நடைப்பெற்று வருகிறது, மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 3.09.2026-வுடன் முடிவடைகிறது, தற்போது மழைக்காலம் தொடர உள்ளதால் டெங்கு மற்றும் மலேசியா போன்ற நோய் தொற்றுகளில் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி DBC பணியாளர்கள் நியமனம் செய்யவும் மேற்கண்ட பணிக்கு ரூ,40,00,000/-க்கும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண்: 1815/2025/எச்1)** | **தீர்மான எண்.1113**<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திரு.ம.செல்வா, 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 20.07.2026 | **பொருள் – 39**<br>**திரு.மு.ம.செல்வம், 7 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. மணப்பாறை நகராட்சியாக ஆன பிறகு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்று மக்கள் பணி ஆற்றிய தலைவர், துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்களை கல்வெட்டு பொறித்து நமது நகராட்சி வளாகத்தில் இடம் பெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது<br>2. மணப்பாறை நகராட்சி வளர்ந்து வரும் பகுதியாகவும், மக்கள் தொகை அதிகமாகவும், போக்குவரத்து அதிக படியாக இருப்பதாலும், பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் அதிக படியாக தார் ரோடுகளில் பயணம் செய்வதால் பெரும் சிரமமாக பொதுமக்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே ரெகுலர் லாரி மூலமாக கடை வீதிகளில் காலை பொருட்களை (சரக்கு) டெலிவரி செய்வதால் மக்களுக்கும், பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் சிரமமாக இருக்கிறது. ஆகவே மணப்பாறை போக்குவரத்து காவல் துறை அதிகாரிகள் மூலமாக காலை 8 மணிக்கு முன்பும் இரவு 8 மணிக்கு மேல் நகருக்குள் லாரி மூலம் பொருட்கள் டெலிவரி செய்ய நடவடிக்கை எடுக்க மன்றம் மூலம் தீர்மானம் நிறைவேற்றி அலுவலகம் மூலம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுதல். | **தீர்மான எண்.1114**<br>அனுமதிக்கப்பட்டது |
| 20.07.2026 | **பொருள் – 40**<br>**திருமதி. த.மனோன்மணி, 20 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. காட்டுமுனியப்பன் கோவிலிலிருந்து அம்மன் முனியாண்டி வீட்டு வரை ஏற்கனவே டெண்டர் விடப்பட்ட தார்சாலை வஃபு வாரியம் இடம் என்று ஒருவர் நீதி மன்றத்தில் கேஸ் போட்டதால் நின்றுவிட்டது. தற்போது வஃபு வாரியம் இல்லை என தீர்ப்பு வழங்கப்பட்டதால் நின்று போன தார்சாலையை மீண்டும் போட்டுத்தரும்படி கோருதல்<br>2. சிமென்ட் ரோடு கோவில்பட்டி ரோட்டிலிருந்து காடப்ப செட்டியர் வீட்டுவரை போடப்பட்டுள்ளது, விடுப்பட்ட அந்த சிமென்ட் சாலையை அம்மன் முனியாண்டி வீடு வரை போட்டுத்தருமாறு கோருதல்<br>3. கக்கூஸ் பின்புறமுள்ள ரவுண்டு கேணி தண்ணீரை டெண்டர் விடப்பட்டு 7 சின்டெக்ஸ் தொட்டி அமைக்கப்பட்டு உள்ளது, ஆனால் பயன்பாட்டிற்கு வராமல் உள்ளது. அந்த சின்டெக்ஸ் தொட்டியில் உள்ள மோட்டாரை இயக்கி சரிசெய்து பொதுமக்களுக்கு தண்ணீர் வினியோகம் | **தீர்மான எண்.1115**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்துதரக் கோருதல்<br>4. ஹவுசிங்யுனிட் கேணி தூர் வாரப்பட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யாமல் உள்ளது. காரணம் அந்த EB சர்வீஸ் ஹவுசிங்போர்டில் உள்ளது. தற்போது ஹவுசிங்யுனிட் கட்டிடம் செயல்படாமல் இடிக்கும் தருவாயில் உள்ளது. மேற்படி EB சர்வீஸ் நகராட்சி ஆணையர் பெயரில் மாற்றி தண்ணீரை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க கோருதல். | |
| 20.07.2026 | **பொருள் – 41**<br>**திருமதி. த.மனோன்மணி, 20 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. அன்பில் தர்மலிங்கம் தெரு RV மஹால் முன்புறமுள்ள நான்கு தெருக்களுக்கும் தார்ரோடு போடப்பட்டுள்ளது, ஆனால் சாக்கடை வசதியில்லை, ஆகவே தெருக்களுக்கு சாக்கடை வசதி செய்துதரக்கோருதல்<br>2. கரிக்கான்குளம் அய்யலுதெரு சந்திக்கும் இடத்தில் உள்ள சாக்கடை தண்ணீரை பட்டியல் கல் அமுங்கி சாக்கடை அடைத்துக்கொண்டது தண்ணீர் செல்லவில்லை எனவே அந்த இடத்தில் தண்ணீர் சிறு பாலம் அமைத்து தரக்கோருதல்<br>3. பாலுசாமி தெரு கடைசியில் சின்டெக்ஸ் டேங் அருகில் உள்ள சாக்கடை பட்டியல் கல் சாக்கடையில் தண்ணீர் தேங்கி அடைப்பு ஏற்பட்டுள்ளது. அந்த இடத்தில் சிறுபாலம் அமைத்து தர க் கோருதல்<br>4. அன்பில் தர்மலிங்கம் தெரு கலைமணி வீட்டிலிருந்து எதிர்புறமுள்ள பிரியாணிபாய் சாதிக் வீடுவரை சுமார் 100 மீட்டர் தார்சாலை அமைத்துத்தர கோருதல்<br>5. கரிக்கான்குளம் வண்ணான்துறையில் ரவுண்டு கேணியிலிருந்து சின்டெக்ஸ் டேங்க் வரையில் EB கம்பி புதிதாக அமைத்து தெருவிளக்கு ஒன்று அமைத்துத்தர கோருதல் | **தீர்மான எண்.1116**<br>அனுமதிக்கப்பட்டது |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**

**நகர்மன்றத் தலைவர்**

**மணப்பாறை நகர்மன்றம்**